ஸலவாத்
எனும்
பொக்கிஷம்

அப்துல் ரஹ்மான்

நூல் விபரம்

நூல் பெயர்	:	ஸலவாத் என்னும் பொக்கிஷம்
பக்கம்	:	16
ஆசிரியர்	:	அப்துல் ரஹ்மான்
உரிமை	:	ஆசிரியருக்கே
தொடர்ப்பு	:	abdulrahuman1@yahoo.com

சமர்ப்பணம்

10-04-2020 இல் இறைவனடி சேர்ந்த

மர்ஹூம் மீரா மொஹிதீன் அயூப் கான்

அவர்களின் ஞாபகார்த்தமாக நடைப்பெற்ற

40ஆம் நாள் கத்முல் குர்ஆன் தமாம் வைபவத்தில் இந்நூல்

வெளியிடப்பட்டு அவரின் பெயரால்

ஈஸால் ஸவாப் செய்யப்படுகிறது.

அல்லாஹ் அன்னாரின் பாவங்களை மன்னித்து அன்னாரை

"ஜென்னத்துல் பிர்தெளஸ்" என்னும் மேலான சுவனத்தில் நபிகள்

நாயகம் ﷺ அன்னவர்களோடு இருக்க துணைப் புரிவானாக...

உள்ளே

1

ஸலவாத்தின்
சிறப்புகள்

3

ஸலவாத்தின்
நன்மைகள்

4

ஸலவாத்
ஒதுவது எப்படி

5

ஸலவாத்துல்
இப்ராஹிமிய்யா

6

ஸலவாத்துல்
ஃபாத்திஹி

7

ஸலவாத்துன்
நாரியா

8

ஸலவாத்துல்
முன்ஜியா

9

ஸலவாத்துத்
தாஜ்

11

ஸலவாத்துன்
நூரி ஸாத்தி

12

ஸலவாத்துஷ்
ஷாபியீ

13

ஸலவாத்து
திப்பில் குலூப்

14

ஸலவாத்துஸ்
ஸஆதா

15

ஸலவாத்துல்
உம்மிய்யி

16

ஸலவாத்துல்
ஜும்ஆ

ஸலவாத்தின் சிறப்புகள்

ஸலவாத் என்பது எங்கள் உயிரிலும் மேலான நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அன்னவர்கள் மீது நாம் சொல்லும் வாழ்த்தும் துஆவும் ஆகும். ஸலவாத் ஒரு பொக்கிஷம் ஆகும். அதன் சிறப்புகளையும் நன்மைகளையும் எழுத்தில் எழுதி முடிக்க முடியாது. அந்தளவு நன்மைகளும் பரக்கத்துகளும் ஸலவாத் ஒதுபவருக்கு கிடைக்கிறது. அவற்றில் சிலவற்றை கீழே பார்ப்போம்.

- அல்லாஹூதஆலா தான் எந்த ஒரு அமலையும் செய்வதாக அல் குர்ஆனில் கூறவில்லை. எல்லா அமல்களும் மனிதர்களாகிய எங்களுக்கே கடமை. ஆனால், அல்லாஹ் தான் செய்வதாக சொல்லும் ஒரே ஒரு அமல் - ஸலவாத் மட்டுமே. அதில் இருந்து விளங்கி கொள்ளலாம் ஸலவாத் எவ்வளவு சிறப்பு மிக்க அமல் என்று.

  அல்லாஹ் அல் குர்ஆனில் கூறுகிறான்:
  ”நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் இந்த நபியின் மீது ஸலவாத் சொல்லுகின்றனர். ஈமான் கொண்ட மூஃமீன்களே! நீங்களும் அவர்கள் மீது ஸலவாத் சொல்லுங்கள். இன்னும் அழகிய முறையில் ஸலாமும் சொல்லுங்கள்.”

  (அல்குர்ஆன் - 33:56)

- நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) கூறினார்கள்:
  ”யாரேனும் என் மீது ஒரு முறை ஸலவாத்துச் சொன்னால், அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத்துச் சொல்வான்”

  (நூல்: முஸ்லிம்)

- நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) கூறினார்கள்:
  ”ஒருவர் என் மீது ஒரு முறை ஸலவாத்து சொல்வாரேயாயின், அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத்துச் சொல்கிறான். அவர் பத்து முறை ஸலவாத்துச் சொன்னால் அவர் மீது அல்லாஹ் நூறுமுறை ஸலவாத்துச் சொல்கிறான். அவர் என் மீது நூறு முறை ஸலவாத்துச் சொன்னால், அவர் மீது அல்லாஹ் ஆயிரம் தடவை ஸலவாத்துச் சொல்கிறான். அதன்றி அவரது இரு புருவங்களுக்கு மத்தியிலும் இவர் ’நிஃபாக்’ என்னும் கபட விசுவாசத்தை விட்டும் விடுதலை பெற்றவரென்றும் அல்லாஹ் பதிவு செய்து விடுகிறான்”

  (நூல்: தப்ரானி)

- நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அன்னவர்கள் அதிகாலையில் மலர்ந்த முகத்துடனும், குளிர்ந்த இதயத்துடனும் வந்தார்கள். ஸஹாபாக்கள் கேட்டார்கள்: ”யா ரசூலுல்லாஹ்! அதிகாலையிலேயே தங்களை சிரித்த முகத்துடனும் மலர்ந்த இதயத்துடனும் காண்கிறோமே! நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அன்னவர்கள் பதிலளித்தார்கள்:ஆம்! எனது ரப்பிடமிருந்து எனக்கு (சுபச்) செய்தி வந்தது. உங்கள் உம்மத்துக்களில் ஒருவர் உங்கள் மீது ஒரு ஸலவாத் ஒதினால், அவருக்கு பத்து நன்மைகள் எழுதப்படுகின்றன. பத்து தீமைகள் அழிக்கப்படுகின்றன. பத்து அந்தஸ்துகள் உயர்த்தப்படுகின்றன. அவர் மீது அதே ஸலவாத்தும் அருளப்படுகிறது (என்பதாக)

  (நூல் - அஹ்மத், நஸயீ, தர்கீப் லில் முன்திரி)

- உபை இப்னு கஃப் (ரலியல்லாஹு அன்ஹு) என்னும் நபித்தோழர் ஒருவர் ஒரு முறை அண்ணலாரிடம் வந்து, அல்லாஹ்வின் ரஹூலே! நான் உங்கள் மீது அதிகமதிகம் ஸலவாத்து ஒதி வருகிறேன். நான் எவ்வளவு ஒத வேண்டும்? ஒரு நாளில் கால் பகுதியில் ஸலவாத்து ஒதட்டுமா? என்று கேட்க, நல்லது அது போன்றே செய்வீராக. எனினும் அதைவிட அதிகப்படுத்திக்கொள்ளல் உமக்கு சிறந்ததென்று அண்ணலார் சொல்ல, அதற்கவர்: அவ்வாறாயின் ஒரு நாளில் பாதி அளவு உங்கள் மீது ஸலவாத்து ஒதவா? என்று திரும்பக்கேட்க அண்ணலார்: நல்லது அவ்வாறே செய்யும், நீர் விரும்பினால் இன்னும் அதிகமாக்கினால் உமக்கு சிறந்ததென்று சொல்ல, மீண்டும் அவர்: அல்லாஹ்வின் ரஸூலே! ஒரு நாளில் மூன்று பகுதி நேரம் உங்கள் மீது ஸலவாத்துச் சொல்லட்டுமா? என்று திரும்பவும் கேட்க, நல்லது அவ்வாறே செய்யும் எனினும் இன்னும் அதிகப்படுத்துதல் உமக்கு சிறந்ததென்று அண்ணலார் திரும்பக்கூறவும் அதற்கவர் மீண்டும், இனிய அல்லாஹ்வின் ரஸூலே! நாள் முழுவதும் உங்கள் மீது ஸலவாத்துச்சொல்வதிலேயே கழிக்கவா? என்று கேட்க, அருமை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள், உடனே உமது கவலைகள் அகன்று, பாவங்கள் மன்னிக்கப்படும் என்று கூறினார்கள்.

(நூல்: திர்மிதி, தாரகுத்னீ)

- நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறினார்கள்:
மறுமையில் எனக்கு மிகவும் நெருங்கியவர், என் மீது அதிகம் ஸலவாத்துச் சொன்னவரே”

(நூல்: திர்மிதி)

- நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறினார்கள்:
”நாட்களில் மிகச்சிறந்தது ஜும்ஆவுடைய நாளாகும். அன்று அதிகமாக என் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள். உங்களின் ஸலவாத்து எனக்கு எடுத்துக் காட்டப்படுகின்றது”

(நூல்: அபூதாவூத்)

ஸலவாத் ஓதுவதால் கிடைக்கும் நன்மைகள்

- அல்லாஹ்வின் அன்பும் திருப்பொருத்தமும் கிடைக்கும்
- நபிகள் நாயகம் ﷺ அன்னவர்களின் அன்பும் திருப்பொருத்தமும் கிடைக்கும்
- ஸலவாத் சொல்பவரின் மீது அல்லாஹ் திரும்ப ஸலவாத் சொல்கிறான்
- ஸலவாத் சொல்பவரின் மீது நபிகள் நாயகம் ﷺ திரும்ப ஸலவாத் சொல்கிறார்கள்
- ஸலவாத் சொல்பவரின் மீது மலக்குகளும் திரும்ப ஸலவாத் சொல்கின்றனர்
- நபிகள் நாயகம் ﷺ அன்னவர்களோடு சுவர்க்கத்திலே ஒன்றாக நெருங்கி இருக்க உதவும்
- அதிகமான பாவங்கள் மன்னிக்கப்படும்
- அதிகமான நன்மைகள் எழுதப்படும்
- அதிகமான அந்தஸ்துகள் (தரஜா) உயர்த்தப்படும்
- சுவர்க்கம் செல்ல துணை புரியும்
- நரகத்தை விட்டு பாதுகாக்கும்
- ஸலவாத் சொல்பவரின் அமல்கள் பரிசுத்தமாக்கப்படும்
- துஆக்கள் (பிரார்த்தனைகள்) அங்கீகரிக்கப்பட உதவி செய்கிறது
- வாழ்க்கையில் சந்தோசம், நிம்மதி ஏற்படுகிறது
- வாழ்க்கையில் பறக்கத் (அபிவிருத்தி) ஏற்படுகிறது
- உள்ளத்தில் அல்லாஹ்வின் ஒளி (நூர்) ஏற்படுகிறது
- மனிதனின் கஷ்டங்கள், கவலைகள், பிரச்சினைகள் அனைத்தும் நீங்குகின்றன
- ஆபத்துகள், நோய்கள், சூனியம், கண் திருஷ்டி ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பு தரும்
- நாளை மறுமையில் நபிகள் நாயகம் ﷺ அன்னவர்களின் ஷபாஅத் (சிபாரிசு) கிடைக்க துணைப்புரிகிறது
- மறுமையில் நபிகள் நாயகம் ﷺ அன்னவர்கள் ஸலவாத் சொல்பவருக்கு சாட்சியாக ஆவார்கள்
- உள்ளத்திலே உள்ள முனாபிக் (நயவஞ்சக) தனத்தை நீக்குகிறது
- ஸதகா (தர்மம்) செய்ய வசதியற்றவருக்கு ஸலவாத் தர்மத்தின் ஸ்தானத்தில் இருப்பது
- இருபது தடவைகள் ஜிஹாது செய்வதைவிட அதிகமான நன்மைகள் கிடைப்பது
- அடிமைகளை விடுதலைசெய்வதை விட அதிக நன்மைகளை பெற்றுத்தருவது
- மற்றவருக்கு ஈஸால் ஸவாப் செய்வதற்கு ஒதும்போது, ஒதுபவருக்கும் ஒதப்படுவருக்கும் நன்மை கிடைப்பது

இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகிறார்கள்

எல்லா வணக்கங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் மறுக்கப்படுவதற்கும் சாத்தியம் உண்டு. ஆனால், நபிகள் நாயகம் ﷺ அன்னவர்களின் மீது சொல்லும் ஸலவாத்தில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படுவதை தவிர மறுக்கப்படுவது இல்லை

ஸலவாத் ஓதுவது எப்படி?

ஸலவாத் என்பது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் மீது வாழ்த்து சொல்லுதலையும் துஆ பிரார்த்தனை புரிதலையும் குறிக்கும்.

ஸலவாத் பல்வேறு முறைகளில் சொல்லலாம். உதாரணமாக,

- அல்லாஹும்ம ஸல்லி அலா சையதினா முஹம்மத்
  (அல்லாஹ்வே! எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ மீது பிரார்த்தனை புரிவாயாக)

- அல்லாஹும்ம ஸல்லி வசல்லிம் அலா சையதினா முஹம்மத்
  (அல்லாஹ்வே! எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ மீது பிரார்த்தனை புரிந்து அமைதியை பொழிவாயாக)

- அல்லாஹும்ம ஸல்லி வசல்லிம் வபாரிக் அலா சையதினா முஹம்மத்
  (அல்லாஹ்வே! எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ மீது பிரார்த்தனை புரிந்து அமைதியை பொழிந்து அருள் புரிவாயாக)

- அல்லாஹும்ம ஸல்லி வசல்லிம் அலா சையதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி
  (அல்லாஹ்வே! எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ மீதும் அவர்களின் குடும்பத்தார்கள் மற்றும் தோழர்கள் மீதும் நீ பிரார்த்தனை புரிந்து அமைதியை பொழிவாயாக)

- ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
  (முஹம்மத் ﷺ மீது அல்லாஹ்வின் பிரார்த்தனை பொழியட்டும்)

- ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்
  (முஹம்மத் ﷺ மீது அல்லாஹ்வின் பிரார்த்தனை மற்றும் அமைதி பொழியட்டும்)

  இவை யாவும் ஸலவாத் ஒதும் ஒரு சில முறைகளாகும். இதே போன்று பல்வேறு முறைகளில் இவற்றை விட வார்த்தைகளை கூட்டியோ குறைத்தோ வேறு முறைகளிலும் ஸலவாத் சொல்லலாம். அனைத்தும் சிறந்ததே. அனைத்துக்கும் நிறைய நற்கூலிகள் கிடைக்கப்பெறும்.

  நாம் தொழுகையில் அத்தஹிய்யாத்தில் ஒதும் ஸலவாத் இப்ராஹிமிய்யா நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அன்னவர்களால் தொழுகையில் ஒத சொல்லி கொடுக்கப்பட்ட ஸலவாத் ஆகும்.

  இவற்றை தவிர பல்வேறு சிறப்பு வாய்ந்த ஸலவாத்துகள் இஸ்லாமிய அறிஞர் பெருமக்களால் இயற்றப்பட்டு உலகளவில் ஒதப்பட்டு வருகின்றன. அந்த ஸலவாத்துகளில் பல நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அன்னவர்களால் அந்த இஸ்லாமிய அறிஞர் பெருமக்களுக்கு கனவின் மூலமோ வேறு வகையிலோ கற்பிக்கப்பட்டு அவை எழுதப்பட்டவையாகும். அதற்குரிய நன்மைகளும் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அன்னவர்களால் அவர்களுக்கு எடுத்து கூறப்பட்டுள்ளன.

அவற்றில் ஒரு சில ஸலவாத்துகளையும் அதன் சிறப்புகளையும் கீழ பார்ப்போம்.

ஸலவாத்துல் இப்ராஹிமிய்யா

اللَّهُمَّ صَلِّ عَلَىٰ مُحَمَّدٍ وَعَلَىٰ آلِ مُحَمَّدٍ ❁ كَمَا صَلَّيْتَ عَلَىٰ اِبْرَاهِيْمَ وَعَلَىٰ آلِ اِبْرَاهِيْمَ ❁ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ ❁ اللَّهُمَّ بَارِكْ عَلَىٰ مُحَمَّدٍ وَعَلَىٰ آلِ مُحَمَّدٍ ❁ كَمَا بَارَكْتَ عَلَىٰ اِبْرَاهِيْمَ وَعَلَىٰ آلِ اِبْرَاهِيْمَ ❁ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

தமிழில்:

அல்லாஹும்ம ஸல்லி அலா செய்யதினா முஹம்மதின் வஆலா ஆலி செய்யதினா முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா செய்யதினா இப்ராஹிம வஆலா ஆலி செய்யதினா இப்ராஹிம இன்னக ஹமீதின் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா செய்யதினா முஹம்மதின் வ ஆலா ஆலி செய்யதினா முஹம்மதின் கமா பாரக்த அலா செய்யதினா இப்ராஹிம வஆலா ஆலி செய்யதினா இப்ராஹிம இன்னக ஹமீதின் மஜீத்

ஓதுவதால் கிடைக்கும் பலன்கள்:

- **மறுமையில் பெருமானாரின் பரிவுரை பெற:**

இந்த ஸலவாத்தை ஒருவன் ஒதிவந்தால் மறுமையில் அவனுக்குத் தாம் பிணை ஏற்று இறைவனிடம் அவனுக்காகப் பரிந்துரைப்பதாகப் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் கூறியுள்ளார்கள்.

- **பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அன்னவர்களைக் கனவில் காண:**

இந்த ஸலவாத்தை ஒருவன் ஆயிரம் (1000) தடவை ஒதிவந்தால் அவன் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களைக் கனவில் காணும் பேறு பெறுவான்.

- **நோய்கள் நீங்கப்பெற:**

இந்த ஸலவாத்தை ஒருவன் ஒதிவந்தால் எல்லா நோய்களும் நீங்கப்பெறும்.

உங்களுக்கு தெரியுமா?

உங்களில் மரணித்தவர்களுக்காக நன்மைகளை சேர்த்து வைப்பதற்காக (அதாவது ஈஸால் ஸவாப் செய்வதற்காக) நீங்கள் புனித அல்குர்ஆன் மற்றும் திக்ர்கள் ஓதி அதன் நன்மைகளை அவர்களுக்கு அனுப்பி வைப்பது போலவும் அவர்கள் பெயரில் தர்மங்கள் (ஸதகா) செய்து அதன் நன்மைகளை அவர்களுக்கு அனுப்பி வைப்பது போலவும் நபிகள் நாயகம் ﷺ அன்னவர்களின் மீது ஸலவாத் ஓதி அதன் நன்மைகளை கபுராளியான உங்கள் அன்புக்குரியவர்களுக்கு சேர்த்து வைக்கலாம். உயிரோடு இருப்பவர் ஓதினால் என்னென்ன நன்மைகள் கிடைக்குமோ அவை அனைத்தும் மரணித்தவருக்கும் கிடைக்கும்.

ஸலவாத்துல் ஃபாத்திஹி

اللَّهُمَّ صَلِّ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ ❁ الْفَاتِحِ لِمَا أُغْلِقَ ❁ وَالْخَاتِمِ لِمَا سَبَقَ ❁ نَاصِرِ الْحَقِّ بِالحَقِّ ❁ وَالْهَادِي إِلَىٰ صِرَاطِكَ الْمُسْتَقِيمِ ❁ وَعَلَىٰ آلِهِ حَقَّ قَدْرِهِ وَمِقْدَارِهِ الْعَظِيمِ

தமிழில்:

அல்லாஹும்ம ஸல்லி அலா செய்யதினா முஹம்மதினில் ஃபாத்திஹ் லிமா உக்லிக. வல் காத்திமி லிமா சபக. நாசிரில் ஹக்கி பில்ஹக்கி. வல் ஹாதி இலா ஸிராதிக்க முஸ்தகீம். வஅலா ஆலிஹி ஹக்க கத்ரிஹி வமிக்தாரிஹில் அலீம

ஓதுவதால் கிடைக்கும் பலன்கள்:

- **இறைஞான இரகசியங்களை அறிய:**

இந்த ஸலவாத்தை ஒருவன் வழக்கமாக நூறு (100) தடவை ஒதிவந்தால் மறைவான இறைஞான இரகசியங்களை அறியலாம்.

- **விருப்பங்கள் நிறைவேற:**

ஒரு விருப்பத்தை மனதிற் கொண்டு அது நிறைவேற பெறுவதற்காக இந்த ஸலவாத்தை ஒருவன் வழக்கமாக நூறு (100) தடவை ஒதிவந்தால் இறையருளால் அது நிறைவேறப்படும்.

- **பெருமானாரை காண:**

ஒருவன் வெள்ளி அல்லது வியாழன் அல்லது திங்கள் இரவுகளில் முதல் ரக்அத்தில் ஸூரா ஃபாத்திஹாவுக்குப் பின் இன்னா அன்ஸல்னாஹு ஸூராவையும் இரண்டாம் ரக்அத்தில் இதா ஸுல்ஸில்லத்துல் அர்ளு ஸூராவையும் மூன்றாம் ரக்அத்தில் குல்யா அய்யுஹல் காஃபிரூன் ஸூராவையும் நான்காம் ரகஅத்தில் குல் அவூது பிறப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் ஸூராக்களையும் ஒதி நான்கு ரக்அத் நஃபில் தொழுது, பின்னர் நறுமணம் நிறைந்த சூழலில் இந்த ஸலவாத்தை ஆயிரம் (1000) தடவை ஒதி வந்தால் அவன் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களைக் காணும் பேறு பெறுவான்.

- **ஆறு இலட்சம் ஸலவாத்துகளுக்கு நிகரான ஸலவாத்:**

இந்த ஸலவாத்தை ஒரு தடவை ஒதுவது ஏனைய ஸலவாத்துகளை ஆறு இலட்சம் (600,000) தடவை ஒதுவதற்கு சமமானது.

- **பாவ மன்னிப்பு பெற:**

இந்த ஸலவாத்தை ஒருவன் நாற்பது நாட்களுக்கு தொடர்ச்சியாக ஒதி வந்தால் இறையருளால் அவனுடைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்.

ஸலவாத்துன் நாரியா

(ஸலவாத்துல் தஃப்ரீஹிய்யா)

اللَّهُمَّ صَلِّ صَلاَةً كَامِلَةً ❁ وَسَلِّمْ سَلاَماً تَامًّ ا ❁ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ الَّذِي تَنْحَلُّ بِهِ الْعُقَدُ ❁ وَتَنْفَرِجُ بِهِ الْكُرَبُ ❁ وَتُقْضَىٰ بِهِ الْحَوَائِجُ ❁ وَتُنَالُ بِهِ الرَّغَائِبُ وَحُسْنُ الْخَوَاتِمِ ❁ وَيُسْتَسْقَى الْغَمَامُ بِوَجْهِهِ الْكَرِيمِ ❁ وَعَلَىٰ آلِهِ وَصَحْبِهِ ❁ فِي كُلِّ لَمْحَةٍ وَنَفَسٍ بِعَدَدِ كُلِّ مَعْلُومٍ لَكَ

தமிழில்:

அல்லாஹும்ம ஸல்லி ஸலாதன் காமிலத்தன். வசல்லிம் ஸலாமன் தாமன். அலா செய்யதினா முஹம்மதி னில்லதி தன்ஹல்லு பிஹில் உகத். வதன்ஃபரிஜு பிஹில் குரப். வதுக்ழா பிஹில் ஹவாஹிஜ். வதுனாலு பிஹிர் ரகாய்பு வஹுஸ்னுல் க்வாதிம். வயுஸ்தஸ்கல் கமாமு பிவஜ்ஹிஹில் கரீம். வ அலா ஆலிஹி வஸஹ்பிஹி. பீ குல்லி லம்ஹதின் வநப்சின் பிஅதத குல்லி மஅலூமின் லக.

ஓதுவதால் கிடைக்கும் பலன்கள்:

- **துன்பங்கள் நீங்கவும் அல்லாஹ்வின் புதையல்கள் கிடைக்கப்பெறவும்:**

மாபெரும் இஸ்லாமிய அறிஞர் இமாம் குர்துபி கூறுகிறார்கள். எவரொருவர் இந்த ஸலவாத்தை தினமும் 141 அல்லது அதற்கு மேலதிகமாக ஒதி வருகிறாரோ அல்லாஹ் அவருடைய துன்பங்கள், கஷ்டங்கள், பிரச்சினைகள் யாவற்றையும் நீக்கி அவரது வாழ்க்கையை இலகுவாக்கி கொடுக்கிறான். அவருக்கு உள்ளத்தில் ஒளியை கொடுத்து, அவருடைய அந்தஸ்தை உயர்த்தி, உணவில் அபிவிருத்தியை ஏற்படுதிகிறான். ஏராளமான நன்மைகளின் கதவுகளை திறக்கிறான். இவர் பட்டினி, பஞ்சம் போன்ற பேரழிவுகளை விட்டு பாதுகாக்கப்படுவார். மக்களின் உள்ளத்தில் இவர் மீதான அன்பு போடப்படும். இவர் எதை கேட்டாலும் அல்லாஹ் அதனை கொடுக்காமல் இருக்க மாட்டான். இதனை தினமும் ஒதி வந்தாலே இந்த எல்லா பலன்களையும் பெற முடியும். மேலும் இது அல்லாஹ்வின் புதையல்களில் ஒன்றாகும். இதனை வழக்கமாக ஒதி வருவது அந்த புதையலை திறப்பதற்கான திறவுகோலாகும் என இமாம் குர்துபி கூறுகிறார்கள்.

- **பெரும் துன்பங்கள் நீங்கப் பெற:**

இதனைப் பலரும் ஒன்று சேர்ந்து அமர்ந்து 4444 தடவை ஒதினால் இறைவன் அருளால் அப்பெரும் துன்பம் பொங்கிச் சாம்பலாகி நிவாரணம் ஏற்படும். எனவே தான் இதற்கு ஸலவாத்துன் நாரியா என்ற பெயரும் ஏற்பட்டது. இதனை ஒருவர் மட்டும் தனித்து ஒதின் நாளொன்றுக்கு 440 ஸலவாத்து வீதம் பத்து நாட்களுக்கு ஒதிப் பதினொன்றாம் நாள் 44 ஸலவாத்துகளை ஒதி முடித்து இறைவனிடம் இறைஞ்ச வேண்டும்.

- **செல்வந்தனாக:**

இந்த ஸலவாத்தை ஒவ்வொரு பர்லான தொழுகைக்குப் பின்பும் பதினொரு (11) தடவை வழக்கமாக ஒதிவரின் அவனுக்குரிய இரணம் அதிகப்பட்டு அவன் விரைவில் பணக்காரனாவான் என்று இமாம் தைனூரி அவர்கள் கூறுகிறார்கள்.

- **சுகப்பிரசவம் ஏற்பட:**

இதனைத் தட்டைப் பீங்கானில் எழுதிப் பிரசவ வேதனைக்கு ஆளான பெண்ணுக்கு கரைத்து குடிக்க வைத்தால் விரைவில் வேதனை நீங்கிச் சுகப் பிரசவம் ஏற்படும்.

ஸலவாத்துல் முன்ஜியா

(ஸலவாத்துல் துன்ஜினா)

اللَّهُمَّ صَلِّ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلاَةً تُنْجِينَا بِهَا مِنْ جَمِيعِ الْأَهْوَالِ وَالْآفَاتِ ❁ وَتَقْضِى لَنَا بِهَا جَمِيعَ الْحَاجَاتِ ❁ وَتُطَهِّرُنَا بِهَا مِنْ جَمِيعِ السَّيِّئَاتِ❁ وَتَرْفَعُنَا بِهَا عِنْدَكَ أَعْلَى الدَّرَجَاتِ ❁ وَتُبَلِّغُنَا بِهَا أَقْصَى الْغَايَاتِ ❁ مِنْ جَمِيعِ الْخَيْرَاتِ ❁ فِى الْحَيَاةِ وَبَعْدَ الْمَمَاتِ

தமிழில்:
அல்லாஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதினின் சலாத்தன் துன்ஜினா பிஹா மின் ஜமீஹில் அஹ்வாலி வல் ஆஃபாத்தி வதக்ளிலனா பிஹா ஜமீஹல் ஹாஜாத்தி, வதுதஹ்ருணா பிஹா மின் ஜமீலில் செய்ஹாத்தி, வதர்பஹுணா பிஹா இந்திக அஹ்லா வதரஜாத்தி, வ தபல்குனா பிஹா அக்சல் காயாத்தி, மின் ஜமீஹில் கைராத்தி, ஃபில் ஹயாத்தி வபஹ்தல் மமாத்தி.

ஓதுவதால் கிடைக்கும் பலன்கள்:

- **எண்ணங்கள் நிறைவேற:**

இதனை ஆயிரம் தடவை ஒதின் இறையருளால் எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும்.

- **துன்பம் நீங்க:**

இதனைத் துன்பத்தில் சிக்கிக் கொண்டிருப்பவன். ஆயிரம் தடவை ஒதினால் அவன் இறையருளால் துன்பம் நீங்கப் பெறுவான்.

- **இரணம் அதிகரிக்க:**

இதனை ஒருவன் வழக்கமாக ஆயிரம் தடவை ஒதிவரின் அவனின் இரணம் அதிகரித்து அவன் செல்வனாவான்.

- **நாடிய நாட்டங்கள் நிறைவேற:**

இதனை ஒருவன் நள்ளிரவு ஆயிரம் தடவை ஒதி இறைவனிடம் இறைஞ்சின் அவன் நாடிய நாட்டங்கள் நிறைவேறும், மின்னலின் வேகத்தில் அவனுடைய இறைஞ்சுதல் இறை சந்நிதானத்தை எய்தும் எண்ணும் கூறப்படுகிறது. ‘இது அர்ஷின் புதையல்களில் ஒன்று’ என ஷைகுல் அக்பர் இப்னு அரபி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஸலவாத்துத் தாஜ்

اللَّهُمَّ صَلِّ عَلَىٰ سَيِّدِنَا وَمَوْلانَا مُحَمَّدٍ ❁ صَاحِبِ التَّاجِ وَالْمِعْرَاجِ وَالْبُرَاقِ وَالْعَلَمِ ❁ دَافِعِ الْبَلآءِ وَالْوَبَآءِ وَالْقَحْطِ وَالْمَرَضِ وَالْأَلَمَ ❁ اِسْمُهُ مَكْتُوبٌ مَرْفُوعٌ مَشْفُوعٌ مَنْقُوشٌ فِي اللَّوْحِ وَالْقَلَمِ ❁ سَيِّدِ الْعَرَبِ وَالْعَجَمِ ❁ جِسْمُهُ مُقَدَّسٌ مُعَطَّرٌ مُطَهَّرٌ مُنَوَّرٌ فِي الْبَيْتِ وَالْحَرَمِ ❁ شَمْسِ الضُّحَى ❁ بَدْرِ الدُّجَى ❁ صَدْرِ الْعُلَى ❁ نُورِ الْهُدَى ❁ كَهْفِ الْوَرَى ❁ مِصْبَاحِ الظُّلَمِ ❁ جَمِيلِ الشِّيَمِ ❁ شَفِيعِ الْاُمَمِ ❁ صَاحِبِ الْجُودِ وَالْكَرَمِ ❁ وَاللّٰهُ عَاصِمُهُ ❁ وَجِبْرِيلُ خَادِمُهُ ❁ وَالْبُرَاقُ مَرْكَبُهُ ❁ وَالْمِعْرَاجُ سَفَرُهُ ❁ وَسِدْرَتُ الْمُنْتَهَى مَقَامُهُ ❁ وَقَابَ قَوْسَيْنِ مَطْلُوبُهُ ❁ وَالْمَطْلُوبُ مَقْصُودُهُ ❁ وَالْمَقْصُودُ مَوْجُودُهُ ❁ سَيِّدِ الْمُرْسَلِينَ ❁ خَاتِمِ النَّبِيِّينَ ❁ شَفِيعِ الْمُذْنِبِينَ ❁ أَنِيسِ الْغَرِيبِينَ ❁ رَحْمَةٍ لِلْعَالَمِينَ ❁ رَاحَةِ الْعَاشِقِينَ ❁ مُرَادِ الْمُشْتَاقِينَ ❁ شَمْسِ الْعَارِفِينَ ❁ سِرَاجِ السَّالِكِينَ ❁ مِصْبَاحِ الْمُقَرَّبِينَ ❁ مُجِبِّ الْفُقَرَاءِ وَالْغُرَبَاءِ وَالْمَسَاكِينِ ❁ سَيِّدِ الثَّقَلَيْنِ ❁ نَبِيِّ الْحَرَمَيْنِ ❁ اِمَامِ الْقِبْلَتَيْنِ ❁ وَسِيلَتِنَا فِي الدَّارَيْنِ ❁ صَاحِبِ قَابَ قَوْسَيْنِ ❁ مَحْبُوبِ رَبِّ الْمَشْرِقَيْنِ وَالْمَغْرِبَيْنِ ❁ جَدِّ الْحَسَنِ وَالْحُسَيْنِ ❁ مَوْلَانَا وَمَوْلَى الثَّقَلَيْنِ ❁ أَبِي الْقَاسِمِ مُحَمَّدِ بْنِ عَبْدِ اللّٰهِ ❁ نُورٍ مِنْ نُورِ اللّٰهِ ❁ يَا أَيُّهَا الْمُشْتَاقُونَ بِنُورِ جَمَالِهِ ❁ صَلُّوا عَلَيْهِ وَآلِهِ وَأَصْحَابِهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

தமிழில்:

அல்லாஹும்ம ஸல்லி அலா செயிதினா வமௌlலானா முஹம்மதின் சாஹிபித்தாஜி வல் மிஃராஜி வல் புராக்கி வல் அலம். தாஃபிஇல் பலாஇ வல் வபாயி வல்கஹ்த்தி வல் மரளி வல் அலம். இஸ்முஹு மக்தூபுன் மர்ஃபூவுன் மஷ்ஃபூஉன் மன்கூஸுன் ஃபில் லவ்ஹி வல்கலம் செய்யிதில் அரபி வல் அஜமி ஜிஸ்முஹு முகத்தஸுன் முஅத்தருன் முதஹ்ஹருன் முனவ்வருன் ஃபில் பைத்தி வல்ஹரம்.

ஸம்ஸில்லுஹா பத்ரித்துஜா ஸத்ரில் உலா நூரில் ஹுதா கஹ்ஃபில் வரா மிஸ்பாஹிள்ளுளம் ஜமீலிஸ் ஸியம் ஸஃபீஇல் உமம் ஸாஹிபில் ஜூதி வல்கரமி வல்லாஹு ஆசிமுஹு வஜிப்ரீலு ஹா(H)திமுஹு வல் புராக்கு மர்கபுஹு வல்மிஃராஜு ஸஃபருஹு வஸித்ரத்துல் முன்தஹா மகாமுஹு வகாப கவ்ஸைனி மத்லூபுஹு வல் மத்லூபு மக்ஸூதுஹு வல் மக்ஸூது மவ்ஜூதுஹு ஸய்யிதில் முர்ஸலீன் ஹா(H)த்தமுன் னபிய்யீன் ஷஃபீஇல் முத்னிபீன் அனீஸில் ஙராயிபீன் ரஹ்மத்தன் லில்ஆலமீன் ராஹத்தில் ஆஸிக்கீன் முராதல் முஸ்தாக்கீன் ஷம்ஸில் ஆரிஃபீன் ஸிராஜிஸ்ஸாலிகீன் மிஸ்பாஹில் முகர்ரபீன் முஹிப்பில் ஃபுகராயி வல் மஷாகீன் ஸய்யிதி தக்கலைனி நபிய்யில் ஹரமைனி இமாமில் கிப்லதைனி வஸீலத்தினா ஃபித்தாரைனி ஸாஹிபி காப கவ்ஸைனி மஹ்பூபிரப்பில் மஸ்ரிகைனி வல் மஃரிபைனி ஜத்தில் ஹஸனி வல் ஹுஸைனி மவ்லானா வமவ்லா தக்கலைனி அபில்காஸிமி முஹம்மதிப்னி அப்தில்லாஹி நூரின் மின் நூரில்லாஹி யாஅய்யுஹல் முஸ்தாக்கூன பிநூரி ஜமாலிஹி ஸல்லூ அலைஹி வஆலிஹி வஅஸ்ஹாபிஹி வஸல்லிமூ தஸ்லீமா.

ஓதுவதால் கிடைக்கும் பலன்கள்:

- **குழந்தை பெற:**

இருபத்தியொரு பேரீத்தம் பழங்களை ஒன்றாக வைத்து அவற்றின் மீது ஏழு தடவை இதனை ஒதி நாளொன்றுக்கு ஒன்று வீதம் இருபத்தியொரு நாட்கள் அந்தப் பேரீத்தம் பழங்களை ஒரு பெண் உண்டு அதன்பின் தன் கணவனுடன் மருவின் இறைவனருளால் கருவுறுவாள். அதன்பின் கருவில் ஏதேனும் கோளாறு ஏற்படின் தொடர்ந்து ஏழு நாட்களுக்கு இதனைத் தண்ணீரில் ஒதி ஊதிக்குடித்துவரின் கரு காக்கப் பெற்று குழந்தை பிறக்கும்.

- **குறிக்கோள் எய்தப் பெற:**

நள்ளிரவில் விழித்தெழுந்து 'உளூ' வுடன் நாற்பத்து ஒரு தடவை வீதம் நாற்பது தடவை இதனை ஒதின் எண்ணிய குறிக்கோளை இறையருளால் எய்தப் பெறலாம்.

- **வறுமை நீங்க:**

இதனை ஒருவன் இஷா தொழுதபின் நாற்பத்து ஒரு தடவை வீதம் நாற்பது நாட்கள் ஒதிவரின் அவனைப் பிடித்த வறுமை தொலையும்.

- **இரணம் அதிகரிக்க:**

இதனை ஒருவன் சுபஹ் தொழுகைக்குப் பின் வழக்கமாக ஒரு தடவை ஒதினால் அவருடைய இரணம் அதிகப்படும்.

- **மனத் தெளிவு பெற:**

இதனை ஒருவன் சுபஹ் தொழுகைக்குப் பின் ஏழு தடவையும் அஸர் தொழுகை, இஷாத் தொழுகை ஆகியவற்றிற்குப் பின் மும்மூன்று தடவையும் வழக்கமாக ஒதி வந்தால் அவனுடைய மனம் இருள் நீங்கி ஒளி பெறும்.

- **வஞ்சனை, பேய், தொத்து நோய் நீங்க:**

வஞ்சனை வைக்கப்பட்டவர்களுக்கும் பேய் பிடித்த வர்களுக்கும் தொத்து நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் இதனை பதினொரு தடவை தண்ணீரில் ஒதி ஊதி கொடுத்தால் நலம் ஏற்படும்.

- **இரணம் அதிகரிக்க:**

இதனை ஒருவன் சுபஹ் தொழுகைக்குப் பின் வழக்கமாக ஒரு தடவை ஒதினால் அவருடைய இரணம் அதிகப்படும்.

- **பிறரின் பகைமை, பொறாமை, துன்பம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற**

இதனை ஒருவன் தொடர்ந்து ஒதி வந்தால் அவன் பிரரின் பகைமை, பொறாமை, தொல்லை, துன்பம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுவான்.

- **பெருமானார் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அன்னவர்களைக் கனவில் காண:**

ஒருவன் பெருமானார் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அன்னவர்களைக் கனவில் காணவிரும்பின் வளர்ப்பிறையில் வரும் ஒரு வெள்ளி இரவில் தூய்மையான உடையணிந்து நறுமணம் பூசி இஷாத் தொழுகை முடித்து உளூவுடன் நூற்று எழுபது தடவை இந்த ஸலவாத்தை ஒதி விட்டு உறங்கவும். இவாறு தொடர்ந்து மொத்தம் பதினொரு இரவுகள் செய்துவரின் இவ்விரவுகளில் எதிலாவது அவன் பெருமானார் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அன்னவர்களைக் கனவில் காணும் பேறு பெறுவான்.

ஸலவாத்துன் நூரி ஸாத்தி

اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ النُّورِ الذَّاتِي وَالسِّرِّ السَّارِي فِي سَائِرِ الأَسْمَاءِ وَالصِّفَاتِ.

தமிழில்:
அல்லாஹும்ம ஸல்லி வசல்லிம் வபாரிக் அலா செய்யதினா முஹம்மதின் நூரி ஸாத்தி வஸிர்ரி அஸ்ராரி ஃபி ஸாஹிரி அஸ்மாஹி வஸ் ஷிபாத்தி வஆலா ஆலிஹி வசஹ்பிஹி வசல்லிம்.

ஓதுவதால் கிடைக்கும் பலன்கள்:

- **ஒரிலட்சம் ஸலவாத்துகளுக்கு நிகர்:**

இதனை ஒரு தடவை ஒதுவது மர ஸலவாத்துகளை ஒரிலட்சம் தடவை ஒதுவதற்கு நிகராகும்.

- **துன்பம், பீடை அகல:**

இதனை ஒருவன் தினந்தோறும் ஐந்நூறு தடவை ஒதிவரின் அவனுடைய துன்பங்களும், அவனைப் பீடித்த பீடைகளும் அவனை விட்டகலும்.

- **கண் ஒளி, இதய ஒளி எய்தப் பெற:**

இதனை வழக்கமாக ஒதி வருபவர்கள் கண் ஒளி, இதய ஒளி ஆயாவை எய்தப் பெறுவர். இதனைச் சிறு வயது முதல் வழக்கமாக ஒதி வருபவர்களுக்குக் கண் ஒளி மங்காது. இஅது சோதிக்கப்பட்ட ஒன்றாகும்.

ஸலவாத்துஷ் ஷாபியீ

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ عَدَدَ مَا ذَكَرَهُ الذَّاكِرُونَ وَغَفَلَ عَنْ ذِكْرِهِ الْغَافِلونَ

தமிழில்:
அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் அதத மா தகரஹுத் தாகிரூன வ (G)கபல அன் திக்ரிஹில் (G)காபிலூன்

ஓதுவதால் கிடைக்கும் பலன்கள்:

- **மறுமையில் கேள்வி கணக்கின்றி சுவனம் புக:**

இமாம் இப்னு புனான் அல் இஸ்பஹாணி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைக் கனவில் கண்டு, “இமாம் ஷாபியீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் தங்களின் பெரிய தந்தையின் வழி வந்தவராயிற்றே. அவர்களுக்குத் தாங்கள் அளித்த தனிச் சிறப்பு யாது?” என்று வினவிய போது, அவரிடம் மறுமையில் கேள்வி கணக்குக் கேட்க வேண்டாமென்று இறைவனிடம் பரிந்துரைத்திருக்கின்றேன்” என்று பதிலிறுத்தனர். ”அத்தகு பேற்றினை அவர்கள் எவ்வாறு எய்தப் பெற்றனர்?” என்று இஸ்பஹானெ இமாம் (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை வினவ, ”அவர் என் மீது எவருமே ஒதாத ஸலவாத்தை வழக்கமாக ஒதி வருவதன் காரணமாக நான் இறைவனிடம் அவருக்காக அவ்விதம் பரிந்துரைத்தேன்” என்று கூறி மேலே கூறப்பட்ட ஸலவாத்தை மொழிந்தனர்.

ஸலவாத்து திப்பில் குலூப்

اللَّهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ طِبِّ الْقُلُوْبِ وَدَوَائِهَا وَعَافِيَةِ الْاَبْدَانِ وَشِفَائِهَا وَنُوْرِ الْاَبْصَارِ وَضِيَائِهَا وَعَلٰى اٰلِهِ وَصَحْبِهِ وَسَلِّم

தமிழில்:
அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் அதத மா தகரஹுத் தாகிரூன வ (G)கபல அன் திக்ரிஹில் (G)காபிலூன்

ஓதுவதால் கிடைக்கும் பலன்கள்:

- **நோய், ஆபத்து அணுகாதிருக்க:**

இதனை வழக்கமாக ஒதிவரின் நோய், ஆபத்து முதலியவை அணுகாது.

- **உடல் வேதனை நீங்க:**

உடலில் வேதனை, வலி ஏற்படின் இதனைத் தொடர்ந்து ஒதி ஊதினால் இறையருளால் நிவாரணம் கிடைக்கும்.

- **கண்ணொளி பெற:**

பார்வை குறைந்தவர்கள் அல்லது பார்வையை இழந்தவர்கள் இதனைக் காலையில் நூறு தடவையும் மாலையில் நூறு தடவையும் வழக்கமாக ஒதிவரின் அவர்கள் கண்ணொளி எய்தப் பெறுவர்.

- **நோய் நீங்க**

நோயாளன் ஒருவன் தூய்மையாக அமர்ந்து நல்லெண்ணத்துடன் இதனை ஒதின் இதன் பொருட்டால் நோய் நீங்கப் பெறுவான் என இமாம் ஷாபியி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் கூறினர். இதனை நோயுற்றவர் மீது ஒதி ஊதவும் தண்ணீரில் ஒதி ஊதிக் குடிக்கவும் கொடுப்பின் அவர்கள் விரைவில் நலம் பெறுவர்.

- **அகத்தூய்மை பெற**

இதனை வழக்கமாக ஒதி வருபவர் அகத் தூய்மை எய்தப் பெறுவர்.

ஸலவாத்துஸ் ஸஆதா

اللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ عَدَدَ مَا فِي عِلْمِ اللهِ صَلاَةً دَائِمَةً بِدَوَامِ مُلْكِ اللهِ.(وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ)

தமிழில்:
அல்லாஹும்ம ஸல்லி அலா ஸையிதினா முஹம்மதின் அதத மாfபி இல்மில்லாஹி ஸலாத்தன் தாயிமதன் பிதவாமி முல்கில்லாஹ். வஆலா ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லிம்.

ஓதுவதால் கிடைக்கும் பலன்கள்:

- **ஒரு லட்சம் ஸலவாத் ஓதிய நன்மை:**

அன்னை ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் நாளொன்றுக்கு பத்தாயிரம் ஸவாத்துக்களை ஒதி வரும் வழக்கம் உடையவர்களாக இருந்தார்கள். அதை அறிந்த பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் இதனை அவர்களுக்கு கற்றுக் கொடுத்து இதனை ஒரு தடவை ஒதுவது மற்ற ஸலவாத்துக்களை ஒரிலட்சம் தடவை ஒதுவதற்கு நிகராகும் என்று கூறினார்கள்.

- **இம்மை மறுமை நற்பேறு பெற:**

இதனை வெள்ளியன்று வழக்கமாக ஆயிரம் தடவை ஒதி வந்தால் இம்மையிலும், மறுமையிலும் நற்பேறு பெறலாம்.

- **பாம்பு தேன் கடிக்காதிருக்க:**

ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் அஸ்தஃபிருல்லாஹ் என்று நூறு தடவை ஒதி, பின்னர் இந்த ஸலவாத்தை நூறு தடவை ஒதி பின்னர் 'லாஇலாஹ இல்லல்லாஹு மலிக்குல் ஹக்குல் முபீன் என்று நூறு தடவையும் பின்னர் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸாதிகுல் வஃதில் அமீன்' என்று ஒரு தடவை ஒதி, பின்னர் பெருமானார் சமூகத்திற்கு ஸுரத்துல் ஃபாத்திஹா ஒரு தடவை ஒதி ஹதியாச் செய்து அதே போன்று ரிபாயி ஆண்டகை மீதும் ரிஃபாயி தரீக்காவின் ஷைகுமார்கள் மீதும் பின்னர் எல்லாத் தரீக்காக்களின் ஷைகுமார்கள் மீதும் ஒவ்வொரு தடவை ஸுரா ஃபாத்திஹா ஒதி ஹதியா செய்து வந்தால் பாம்பு, தேள் ஆகியவை கடிக்காது. கடித்த போதிலும் அதனால் தீங்கு ஏற்படாது.

ஸலவாத்துல் உம்மிய்யி

اللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ عَبْدِكَ وَنَبِيِّكَ وَرَسُولِكَ النَّبِيِّ الأُمِّيِّ . (وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلَمْ).

தமிழில்:

அல்லாஹும்ம ஸல்லி அலா ஸையிதினா முஹம்மதின் அப்திக வநபிய்யிக வரஸூலிகன் நபியில் உம்மியி. வஆலா ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லிம்.

ஓதுவதால் கிடைக்கும் பலன்கள்:

- **எண்பது வருட பாவங்கள் மன்னிக்க:**

இதை ஒருவன் வெள்ளியன்று எண்பது தடவை ஒதினால் அவனுடைய எண்பது ஆண்டு பாவங்களை இறைவன் மன்னிப்பான் என்று ஸஹ்லு இப்னு அப்துல்லாஹ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியுள்ளார்கள்.

- **இறைவனைத் தரிசிக்க:**

ஒருவன் வெள்ளியன்று பகலில் இந்த ஸலவாத்தை ஆயிரம் தடவை ஒதினால் அந்த இரவிலேயே அவன் இறைவனைத் தரிசிக்கும் வாய்ப்பு பெறுவான். இல்லையெனில் அவன் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைக் காண்பான் அல்லது சுவனத்தில் அவனுக்குரிய இடத்தை காண்பான். அவ்விதம் காணாவிடின் இரண்டாம் ஜும்ஆ. மூன்றாம் ஜும்ஆ, நான்காம் ஜும்ஆ. ஐந்தாம் ஜும்ஆ வரை ஒதி வர வேண்டும். நிச்சயம் கண்டு கொள்வான்" என பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக புஸ்தானுல் புகராயிய்யா' என்ற நூலில் இமாம் யாஃபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மூலம் அறிவிக்கப்படுகிறது.

- **பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை விழிப்பு நிலையில் காண:**

ஒருவன் இதனை நாள்தோறும் ஐநூறு தடவை வழக்கமாக ஒதி வந்தால் அவன் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை விழிப்பு நிலையில் காணாமல் மரணிக்க மாட்டான். என முர்ஸிய்யி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் கூறுகின்றார்கள்.

- **பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை காண:**

ஒருவன் வெள்ளி இரவில் ஒவ்வொரு ரக அத்திலும் (ஸூரா ஃபாத்திஹா ஒரு தடவையும் ஆயத்துல் குர்ஸி பதினைந்து தடவையும் ஒதி இரண்டு ரக்அத் நபில் தொழுத பின் ஆயிரம் தடவை இந்த ஸலவாத்தை ஒதுவானாயின் அவன் என்னைத் நிச்சயமாக கனவில் கண்டு கொள்வான். மறு ஜும்ஆ வருவதற்குள் எவனொருவன் என்னைக் கனவில் கண்டானோ அவனுக்கும் சுவர்க்கம் நிச்சயமாகி விட்டது. என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். இச்செய்தி முஹ்யித்தீன் ஆண்டகை எழுதிய 'குன்யத்துத் தாலிபீன் என்ற நூலிலும் அஃபஸ்லுஸ் ஸலவாத்' என்ற நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஸலவாத்தை தாம் தம் தந்தையின் ஆணைப்படி ஒதி வந்ததாகவும் ஒரிரவு பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை கனவில் கண்டு இதனை ஒதிக் காட்டிய பொழுது அவர்கள் பெரிதும் மகிழ்ந்ததாகவும் ஷா வலியுல்லாஹ் தம் ஹிருஸ் ஸமீன் என்ற நூலில் எழுதியுள்ளார்கள்.

ஸலவாத்துல் ஜும்ஆ

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدِنِ النَّبِيِّ الْأُمِّيِّ وَعَلَى آلِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا

தமிழில்:
அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதினின் நபிய்யில் உம்மியி வஆலா ஆலிஹி வஸல்லிம் தஸ்லீமா.

ஓதுவதால் கிடைக்கும் பலன்கள்:

- **எண்பது வருட பாவங்கள் மன்னிக்கவும் நன்மைகளை சம்பாதிக்கவும்:**

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்ள் கூறியதாக அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். எவரொருவர் இந்த ஸலவாத்தை வெள்ளிக்கிழமை அன்று அஸர் தொழுகைக்குப் பின் தொழுத இடத்தை விட்டு எழுந்திட முன்னர் எண்பது தடவை ஓதுகின்றாரோ அவருடைய எண்பது வருட பாவத்தை அல்லாஹ் மன்னித்து விடுகின்றான். மேலும் அவருக்கு எண்பது வருட நன்மைகளை வழங்குகிறான்.